செ.வெ.எண்: 159 நாள்: 19/02/2011

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பயிற்சி பெற்ற 2500 இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்**

சென்னை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகு மூலம் தொழிற்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாமை 19.02.2011 அன்று காலை 10 மணி அளவில் நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், டாக்டர் கே. கோபால் இ.ஆ.ப. அவர்கள் துவங்கி வைத்தார்கள். இந்த சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தமிழக அரசின் மூலம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இளைஞர் தொழிற் பயிற்சி திட்டத்தின் மூலம் எலக்ட்ரீஷியன், A.C.மெக்கானிக், செவிலியர், ஆடை வடிவமைப்பு, செயற்கை ஆபரணங்கள் செய்தல், நகைகளில் கற்கள் பதித்தல், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுதுபார்த்தல், கிரேன் ஆபரேட்டர், ஜே.சி.பி ஆபரேட்டர், போன்ற பல்வேறு துறைகளில் தலைசிறந்த முன்னணி நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். மேலும் இம்முகாமில் சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள 30-க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் ஆர்வமுடன் பங்கு பெற்று இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கினர். இம்முகாமில் திட்ட பயனாளிகள் தவிர்த்து வேலை இல்லாத பல இளைஞர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) திரு.பாலாஜி இ.ஆ.ப. மற்றும் சென்னை மகளிர் திட்ட அலுவலர் திருமதி. க. சுமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9